(அ) திருவொற்றியூர் தொகுதி, 17-வது வட்டம் பகுதியில் குடிசைகளில் வாழும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இப்பகுதிகள் ஆட்சேபகரமான புறம்போக்கு என்பதால் வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. த. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

வினா எண் 149, திரு. ப. அரசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

149—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***60678—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, திருப்பரங்குன்றம் அருள்மிகு முருகன் கோயில் வருமானத்திலிருந்து மதுரையில் மகளிருக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் வருமானத்திலிருந்து மதுரையில் மகளிருக்கான கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓராண்டுக்கு முன்னாலே என்னுடைய தொகுதியின் சகோதரர் ஒருவருடைய கல்யாணத்திற்காக திருப்பரங்குன்றம் சென்றிருந்தேன்.

2005 மார்ச் 14]

அங்கே அந்த விடுதியில் தங்கியிருக்கிறபோது, அந்தப் பகுதியிலே இருக்கின்ற பல பெரியவர்கள் வந்து பேசிக்கொண்டு இருந்தார்கள். மதுரையிலே நிறைய மகளிர் கல்லூரிகள் இருந்தாலும், கட்டணம், அதுவல்லாமல் நன்கொடை போன்றவை மிகவும் அதிகமாக இருப்பதால், அந்தப் பகுதியிலே இருக்கிற மகளிர் படிப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது. திருப்பரங்குன்றம் கோயிலுடைய வருவாய் ஓரளவிற்கு நன்றாக இருப்பதால், அந்தப் பகுதியிலே ஒரு மகளிர் கல்லூரி தொடங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினராகிய நீங்கள் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லவேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி போடப்பட்டது. ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கிற மகளிருடைய கல்வி முன்னேற்றத்தைக் கருத்திலே கொண்டு அருள்மிகு திருப்பரங்குன்றம் கோயிலுடைய வருவாயிலிருந்து அங்கே ஒரு மகளிர் கல்லூரி தொடங்குவதற்கு—நிறையப் பேர் படிக்காமல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைத் தொடங்குவதற்கு—அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் நிதியிலிருந்து மகளிருக்கான பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்று, 1,652 மாணவிகள் பயன்பெறும் வகையில் தற்சமயம் நடத்தப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில் நிதியிலிருந்து கல்லூரி ஆரம்பிப்பதாக இருந்தால் சுயநிதிக் கல்லூரிகள் மட்டுமே நடத்த அரசு அனுமதி பெறமுடியும். அரசு மானியம் ஏதும் கிடையாது. சுயநிதிக் கல்லூரி துவங்குவதற்குக் குறைந்தபட்சம் மாதாமாதம் 20 இலட்சம் ரூபாயும், தொடராச் செலவின வகையில் ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாயும் தேவைப்படும். இது குறைந்தது நான்கு வகை வகுப்புகள் கொண்ட கல்லூரி ஆரம்பிக்க ஆகும் உத்தேசச் செலவினமாகும். இவ்வளவு நிதி ஆதாரம் இத்திருக்கோயிலில் தற்சமயம் இல்லை. மேலும் மேற்படி கல்லூரி ஆரம்பிக்க, ஒரே இடத்திற்கான கிராமப்புறமாக இருந்தால் 10 ஏக்கர் பரப்பளவும், நகர்ப்புறமாக இருந்தால் 5 ஏக்கர் பரப்பளவு நிலமும் இருக்க வேண்டும். அவ்வளவு பரப்பளவு உள்ள இடம் இத்திருக்கோயிலுக்கு கிராமப்புறத்திலோ அல்லது நகர்ப்புறத்திலோ இல்லை. இத்திருக்கோயில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி தற்சமயம் 75 சென்ட் நிலத்தில் இயங்கி வருகிறது. தற்போதைய அரசு விதிகளின்படி 5 ஏக்கர் நிலம் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குத் தேவைப்படுகிறது.

[2005 மார்ச் 14

மேற்படி இடம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அரசு மானியம் பெறும் மகளிர் கலைக் கல்லூரிகள் மூன்று, ஏற்கெனவே மதுரையில் செயல்பட்டு வருவதுடன், பல்வேறு சுயநிதி கலைக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. மேற்படி காரண, காரியங்களின் அடிப்படையில் இத்திருக்கோயிலில் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆரம்பிக்கும் கருத்துரு ஏதும் இல்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 150, திரு. செ. வெங்கடாஜலம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

150—

உதவித் தொகை

***50529—திரு. செ. வெங்கடாஜலம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 1-வது தொகுதியில் முதியோர் உதவித் தொகை மற்றும் விதவைகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை பெற்றவர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மீண்டும் உதவித் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) சேலம் வட்டத்தில் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் 100 சதவீதம் தணிக்கையின்மூலம் மொத்தம் 2,540 இனங்கள் நிறுத்தம் செய்யப்பட்டன. மேற்கண்ட இனங்களை மீள விசாரணை செய்ததில், 1,613 நபர்கள் தகுதியுள்ளவர்கள் எனக் கணக்கிட்டு, மேற்படி பயனாளிகளுக்கு 2003 மே மாதம் முதல் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 936 பயனாளிகள் உதவித் தொகை பெறத் தகுதியற்றவர்கள் எனக் கண்டறியப்பட்டபின் உதவித் தொகை வழங்க இயலாது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*